# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***

***SESSIONS CASE NO. 724/2022***

Deposition of Witness for Prosecution :: **P.W.20**

| | | |
|---|---|---|
| பெயர் | – | பழனி |
| தந்தை பெயர் | – | |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. P.Maridoss in accordance with the Provisions of Act X of 1873 on **the 21st day of July 2025.**

(A1, A2 not present. Petition filed through e-filing and allowed. )
(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை மாநகரத்தில் யானைக்கவுனி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.7.2022ம் தேதி அதிகாலை 03.30 மணிக்கு நான் மானூர் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது தென்கலம் கிராம உதவியாளர் தேவேந்திரன் என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.272/2022 சட்டப் பிரிவு 174 Crpc (suspicious death) ஆக வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.20. அசல் முதல் தகவல் அறிக்கையையும், வாதியின் அசல் புகார் மனுவையும் இணைத்து குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.5, திருநெல்வேலி அவர்களுக்கு காவலர் 2231 சத்தியமூர்த்தி என்பவர் மூலம் அனுப்பியும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட

அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

நான் சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் கிராம உதவியாளர் என்னிடம் காவல்நிலையத்திற்கு வந்து புகார் மனு கொடுத்ததாக சொல்வதும், அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சொல்வதும் உண்மையில்லை என்றால் சரியல்ல. இதற்கு முன்பு தாழையூத்து காவல்நிலையத்தில் குற்ற எண்.183/2022 (man missing) வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அந்த முதல் தகவல் அறிக்கையில் கண்ட விவரங்களை சரிகட்டுவதற்காக யாரென்றே தெரியாத ஒரு பிணத்தை எடுத்து இந்த வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை